**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.393/2021**
**Deposition of witness for prosecution –DW-2**

| | | |
|---|---|---|
| Name | : | நீதிமணி |
| F/H Name | : | சோனைமுத்து |
| Village | : | சேலம் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 15th day of June 2026.

புகார்தாரர் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேலத்தில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் சவரிமுத்துவை எனக்கு யார் என்று தெரியாது. இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் நான் அவரை பார்த்தேன். நான் சென்னையில் இறக்குமதி ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தை புல்லியன் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். அந்த நிறுவனத்திற்கு நானும் எனது மனைவி மேனகாவும் பங்குதாரர்கள் ஆவோம். இராமநாதபுரம் சாயல்குடியை சேர்ந்த ஆனந்தன் என்பவர் இராமநாதபுரம் பகுதியில் அங்கோயன் அசோசியேசன்ஸ் என்ற பைனான்ஸ் கம்பெனி ஒன்று நடத்தி வந்தார். அவர் எனக்கு 25 வருடங்களாக பழக்கமானவர். நான் அவரிடம் பணம் சுமார் 18 கோடி வரை பணம் வாங்கி உள்ளேன். அதற்காக அவரிடம் நான் என்னுடைய கையொப்பம் மட்டும் செய்த வேறு எந்த விவரங்களும் நிரப்பப்படாத காசோலைகள் சுமார் 400 எண்ணிக்கை கொண்டவற்றை கொடுத்துள்ளேன். 2019ம் ஆண்டு எங்கள் இருவருக்குள்ளே கணக்கு வழக்கில் பிரச்சனை ஏற்பட்டு அது தொடர்பாக நான் சென்னை துணை கமிஷனர் அலுவலகத்தில் இணைய தள புகார் கொடுத்தேன். அதனை தொடர்ந்து ஆனந்த் என் மீதும் எனது மனைவி மீதும் இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவில் புகார்

கொடுத்தார். அதனை தொடர்ந்து என்னையும் எனது மனைவியையும் போலீசார் சென்னையில் வைத்து 05.06.2020 அன்று கைது செய்தார்கள். அதன்பின்பு நீதிமன்ற காவலில் இருந்த நான் 09.09.2020 அன்று தான் பிணையில் வெளியே வந்தேன். நான் நீதிமன்ற காவலில் இருந்த காலகட்டத்தில் ஜூலை மாதமே எனது மனைவி சென்னையில் நாங்கள் இருந்த வீட்டை காலி செய்துவிட்டு சேலம் சென்றுவிட்டார். அதற்கான ஆவணங்களை ஏற்கனவே எங்கள் தரப்பில் சமர்ப்பித்துள்ளோம். புகார்தாரர் செப்டம்பர் மாதம் 2020 அன்று சென்னை வீட்டில் வைத்து என்னிடம் இருந்து காசோலை வாங்கியதாக சொல்லும் நிலையில் அந்த காலகட்டத்தில் நான் அந்த வீட்டில் வசிக்கவேயில்லை. எனக்கு புகார்தாரரை நேரடியாக தெரியாது. நான் அவரிடம் எந்த வரவு செலவும் வைக்கவில்லை. நான் அவரிடம் எந்த காசோலையையும் கொடுக்கவில்லை.

<u>புகார்தாரர் தரப்பில் கு.வி</u>

நான் புல்லியன் பின்டேக் கம்பெனியின் நிறுவனர் என்றால் சரிதான். அந்த நிறுவனம் 2018 ல் இருந்து சுமார் 1 ½ வருடம் செயல்பட்டது. அந்த நிறுவனம் சென்னை அண்ணாசாலையில் செயல்பட்டது. அந்த காலகட்டத்தில் சென்னை ஆழ்வார்பேட்டையில் தான் குடியிருந்தேன். மக்களிடம் இருந்து பணத்தை வசூல் செய்து அதற்கு 10 முதல் 15 வரை வட்டி தருவதாக பணத்தை மேற்படி நிறுவனத்தின் மூலம் நான் பெற்று வந்தேன் என்றால் அவ்வளவு வட்டிதொகை கொடுக்க மாட்டேன். 5 ல் இருந்து 7 சதவீதம் வட்டி தான் தருவேன். பணம் கொடுத்த நபர்களை ஊக்குவிப்பதற்காக கார் உள்ளிட்ட பரிசு பொருட்களை நான் கொடுப்பேன் என்றால் சரியல்ல, ஆனந்த் தான் அவரது நிறுவனம் மூலம் கொடுப்பார். எனது நிறுவனத்தில் முதலீடு பண்ணவார்களுக்கு பாதுகாப்பாக என்னுடைய கையொப்பம் செய்த நிரப்பப்படாத 400 காசோலைகளை ஆனந்திடம் கொடுத்தேனா என்றால் நான் அவரது நிறுவனத்திற்கு தான் கொரியர் மூலம் அனுப்பி வைத்தேன். ஆனந்த் எந்தெந்த இடத்தில் இருந்து பணத்தை வசூல் செய்வார் என்று எனக்கு தெரியாது. நான் ஆனந்திடம் மட்டும் தான் பணம் வாங்கினேன். எனது நிறுவனத்தில் முதலீடு செய்து ஏமாந்துவிட்டதாக சொல்லி தான் என் மீதும் என் மனைவி மீதும் ஆனந்த் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலும் எனது நிறுவனத்திற்கு ஆனந்த் ஒரு லீடராக செயல்பட்டு பணத்தை வசூல் செய்து மட்டும் தான் கொடுத்தார் என்றாலும் அவர் தனியாக நிறுவனத்தை வைத்து நடத்தவில்லை என்றாலும்

சரியல்ல. அவர் தனியாக நிறுவனம் நடத்தினார். அருண்குமார் என்பவர் எனது நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளாரா என்றால் எனக்கு அவரை தெரியாது. ஆனந்தை மட்டும் தான் தெரியும். அவரிடம் நான் காசு வாங்கி கொண்டு காசோலை கொடுத்ததாக வழக்கு உள்ளது என்றால் அந்த காசோலையும் நான் ஆனந்திடம் தான் கொடுத்தேன். நான் காசோலைகளை சென்னையில் வைத்து கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவியான எ.ம.சா.1 அவரது சாட்சியத்தில் எங்களது நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பிற்காக காசோலைகளை சென்னையில் இருந்து நேரடியாக கொடுத்ததாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள் காசோலைகளை கொரியர் மூலமாக ஆனந்திற்கு அனுப்பி வைப்போம் அவர்தான் உறுப்பினர்களுக்கு கொடுப்பார். புகாரில் சொல்லப்பட்டுள்ளவாறு புகார்தாரருக்கு நானும் எனது மனைவியும் காசோலையை கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையான ம.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது மற்ற விவரங்களை நான் எழுதவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் நான் நேரடியாகவே பல உறுப்பினர்களுக்கு காசோலை கொடுத்துள்ளேன் என்றாலும், ஆனந்த் மூலமாகவும் உறுப்பினர்களுக்கு காசோலை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது நிறுவனத்திற்கு ஆனந்த் மூலமாகவும், நேரடியாகவும், பல ஏஜண்ட்கள் மூலமாகவும் பணம் வரும் என்றால் சரியல்ல. ஆனந்த் மூலமாக மட்டும் தான் வரும். நான் ஆனந்திடம் கொடுத்தாக சொல்லப்படும் காசோலைகள் வேறு என்றாலும், நான் புகார்தாரருக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் கொடுத்த காசோலைகள் வேறு என்றாலும் சரியல்ல. காசோலை கொடுக்கப்பட்ட பின்பு நிறுவனத்தின் லாபத்தில் இருந்து உறுப்பினர்களுக்கு நான் பணம் அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. கொரானா காலத்தில் உறுப்பினர்களுக்கு எனது நிறுவனத்தில் இருந்து சரிவர பணம் கொடுக்கமுடியாமல் போனது என்றால் சரிதான், ஆனால் கொரானா காலத்திற்கு முன்பாகவே எனக்கும் ஆனந்திற்கும் பணம் கணக்கு வழக்கில் பிரச்சனை ஏற்பட்டிருந்தது. பண மோசடி செய்ததாக எனது நிறுவனத்தின் பெயரில் தான் FIR பதிவு செய்யப்பட்டது என்றால், அந்த வழக்கில் ஆனந்த் தான் முதல் குற்றவாளி. அந்த வழக்கு சம்பந்தமாக தான் எனது சொத்துக்களை மதுரை EOW போலீசார் முடக்கம் செய்தனர் என்றால் சரிதான். நான் காசோலை கொடுத்த பின்பு பணத்தை கொடுக்கவில்லை என்று சொல்லி புகார்தாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கான எனது பதில் அறிவிப்பில் நான் புகார்தாரரை தெரியும் என்பதை மறுக்கவில்லை

என்றாலும் அவருக்கு காசோலை கொடுத்ததை மறுக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் எனது கூட்டத்தில் கலந்து கொண்டு என்னிடம் டெபாசிட் செய்துள்ளார் என்றாலும் அதற்கு பாதுகாதப்பாக தான் நான் இந்த வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றாலும் தற்போது இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக புகார்தாரரை தெரியாது என்றும் அவரிடம் காசோலை தரவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் ஆனந்தை புகார்தாரருக்கு யார் என்றே தெரியாது என்றாலும் அவரிடம் புகார்தாரர் பணத்தையும் செலுத்தவில்லை காசோலையும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. ஆனந்த் எனது கம்பெனி ஊழியர் என்றாலும் நான் தப்பிப்பதற்காக அவர் மீது பழியை போடுகிறேன் என்றாலும் சரியல்ல.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.15 17:30:57 +0530